**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2016**

**D061 இலக்கியத் திறனாய்வு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திறனாய்வு என்ற சொல்லிற்கு இணையாக வழங்கும் வேறொரு சொல் என்ன?
2. இளங்கோவடிகள் விளக்கமாகப் பேசிடும் மூன்று கலைகள் யாவை?
3. தத்துவநிலையில் அமைந்த புதுமைப்பித்தனின் கதையின் பெயர் என்ன?
4. "ஆத்மாவின் ராகங்கள்" என்னும் நாவலின் ஆசிரியர் யார்?
5. மனம் அல்லது உள்ளம் எத்தனை அடுக்குகளைக் கொண்டது?
6. "நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்" - இவ்வரி இடம்பெற்றுள்ள இலக்கண நூல் எது?
7. அறுபது நூற்பாக்களைக் கொண்ட நூல் எது?
8. விருத்தப்பாவில் அமைந்த காப்பியம் எது?

9. திராவிடவேதம் என்று போற்றப்படும் நூல் எது?
10. பதுமனார் என்பார் எந்த நூலுக்கு உரை எழுதினார்?
11. கதையமைப்பைத் தீர்மானிக்கிற சக்தி எது?
12. பின்னை நவீனத்துவ நிலைமை என்ற நூலின் ஆசிரியர் யார்?
13. "தலித்" என்ற சொல்லின் பொருள் யாது?
14. டி. செல்வராஜ் எழுதிய தலித் நாவல் எது?
15. "இனிப்படமாட்டேன்" என்ற நாவலை எழுதியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. திறனாய்வின் அடிப்படை நோக்கம் என்ன?
2. வட்டாரமொழி என்றால் என்ன?
3. திறனாய்வின் வகைகளைக் குறிப்பிடுக.
4. கதைப்பின்னல் என்றால் என்ன?
5. உரை – விளக்கம் தருக.
6. திறனாய்வின் முன்னோடிகள் யார்?
7. பெண்ணியம் – சொற்பொருள் விளக்கம் தருக.
8. புலம்பெயர்வுப் பிரச்சினைகளில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) திறனாய்வாளனின் தகுதிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் இலக்கியங்கள் கூறும் அறநெறிக்கோட்பாடுகள் குறித்து எழுதுக.

2. (அ) "அழகியல்" அணுகுமுறை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உரை தோன்றுவதற்குரிய சூழல்கள் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

3. (அ) பின்னைநவீனத்துவத்தின் தோற்றமும் சூழலும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பெண்ணிய வகைகள் குறித்து விவரிக்க.